
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | நவம்பர் 1990 | இதழ் 11

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா? 1-8
2. பாவத்தின் பயங்கரம் 9-15
3. கெட்டுப் போகிற நல்ல குமாரன் 16-21
4. இரட்சிக்கப்பட்டவர்கள் கிருபையினின்று வீழ்ந்து போதல் சாத்தியம் 22-25
5. நீங்கள் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமோ? 26-27
6. ஒருவன் திருமுழுக்குப் பெறாமல் இரட்சிப்படைய முடியுமா? 28

# THIRUMARAI AASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 3. Nov—1990 Issue 11


**ஆசிரியவுரை**

## எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு முன்பு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிற தகுதி எனக்கோ இந்த உலகில் வே எவருக்குமோ அல்லது குழுவினருக்கோ இல்லை என்பதைக் எல்லா மனத் தாழ்மையுடனும் ஒப்புக் கொள்ளுகிறேன். கிறிஸ்து. ஒருவருக்கே அத்தகுதி உண்டு என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வோம். ஏனெனில் அவரே நியாயாதிபதி. (அப் 17:31)

இருப்பினும், எனது நண்பர்களும், உறவினர்களும் பல்வேறு சபைகளில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களில் பலர் மிகுந்த பக்தி வைராக்யமும், ஆர்வமும் உள்ளவர்கள். கர்த்தருடைய காரியங்களுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறவர்கள். ஆனாலும் பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் **"தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியெனில், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறபடியால் தேவனுக்குக் கீழ்படியாதிருக்கிறார்கள்.** (ரோமர் 10;2,3) என்று வருத்தத்தோடே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது, நான் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறேன் என்று தயவு செய்து என்மீது ஆத்திரப்படாதீர்கள். **"நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும்"** (யோவான் 12:48) என்பதை நான் மறந்து விடவில்லை. ஆயினும் நாம் நேசிக்கிற உறவினர்களோ, நண்பர்களோ தேவனுடைய சித்தத்தை அறியாமலும், அல்லது தேவனுடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறினாலும், கவலையீனமாக இருந்தாலும், அவர்கள் பேரில் உள்ள கரிசனையால் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைத்து தேவனுடைய சித்தத்தைப் புரிய வைத்து, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தூண்டுவதும் நம்முடைய கடமையன்றோ!

அப்போஸ்தலனாகிய பவுல், தன் இனத்தாரின் தவறான வைராக்கியத்தைக் குறித்து **"எனக்கு மிகுந்த துக்கமும், மனவேதனையும் உண்டாயிருக்கிறது"** (ரோமர் 9:1) என்கிறாரே, அது போன்ற ஒரு பந்த பாசத்தால் இதைப் பற்றி எழுதத் துணிந்தேன்.

முதலாவதாக, "எல்லா சபைகள்" என்பதே வேத வாக்கியத்துக்கு முரணானது. சபை ஒன்று தான் (எபே 4:4) அதில் ஒரே சரீரம் என்று தானே இருக்கிறது என்பீர்கள். அவசரப்படாமல் அதே நிருபம் 1-ம் அதிகாரம் 23-ம் வசனத்தையும் வாசியுங்கள். அங்கே 'சரீரமாகிய சபை' என்று இருக்கிறதைக் கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் 'என் சபையைக் கட்டுவேன்' என்று ஒருமையில் தான் சொல்லியிருக்கிறார். (மத் 16:18) அது இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே பண்டிகையன்று வேத வசனத்தின்படி எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. (அப் 2;41-47) அந்தச் சபையை வேதம் **கிறிஸ்துவின் சபை** என்று அழைக்கிறது. (ரோமர் 16:16)

உண்மை இவ்வாறு இருக்க இன்று மனிதன் பல நிறுவனங்களை அமைத்துக் கொண்டு அவைகளுக்குச் சபை என்ற பெயரைச் சூட்டி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுய ரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த தேவனுடைய சபையைக் கொச்சைப் படுத்தி மகிழ்கிறான். (அப் 20:28) இன்றைக்கு மனிதனால் நிறுவப்பட்ட சற்றேறக்குறைய நானூறு நிறுவனங்கள் சபைகள் என்று கூறிக் கொண்டு மக்களைக் குழப்புவதால் கிறிஸ்து கட்டிய உண்மையான சபை எது? என்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இது இரட்சிப்புக்குத் தூணும் ஆதாரமாக இருக்கிற கிறிஸ்துவின் சபையை நோக்கி மக்கள் வராதபடி மக்களை வஞ்-

சிக்க சத்துருவாகிய சாத்தான் செய்யும் சதித் திட்டமேயன்றி வேறல்ல.

இந்தச் சமயத்தில் பழைய ஏற்பாட்டில் கடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. புகழ் பெற்ற சாலமோன் அரச-னுக்குப் பிறகு அவன் குமாரன் ரெகொபேயாம் அரசுக் கட்டில் ஏறுகிறான். அவனுடைய மதியீனமான போக்கினால இஸ்ரவேல் சாம்ராஜியம் இரண்டாக உடைந்து, வடபகுதிக்கு யெரொ-பேயாம். அதிபதியானான். ஆனாலும் அவனுக்கு ஒரு பயம்-மக்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்துக்குப் போக்கு வரவாக இருந்தால் அரச பரம்பரையைச் சேர்ந்த ரெகொபேயாம் மீது அன்பும் மதிப்பும் ஏற்பட்டு, நாளடைவில் மக்கள் அவன் பக்கம் சாய்ந்து விட்டால் ஆபத்து என்று நினைத்தான். ஆகவே அவன் மக்களை எருசலேம் தேவாலயத்துக்குப் போய்த் தொழவேண்டிய அவசியம் உண்டாகாதபடி, தடுத்து நிறுத்த ஒரு தந்திரம் செய்-தான். அவனுடைய எல்லைக்குள் அதாவது தாணிலும், பெத்தே-லிலும், விக்கிரக் கோவில்களைக் கட்டி எகிப்தின் தெய்வங்கள் என்று நம்பப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, ஒரிஜினல் நாடாகிய யூதா-வில் ஆசரிக்கப்படும் பண்டிகைக் கொப்பாக எட்டாம் மாதம் பதி-னைந்தாம் தேதியில் பண்டிகை கொண்டாடி, மேடையிலே பலி-யிட்டான். மக்களைப் பார்த்து, நீங்கள் எருசலேமுக்குப் போகும் சிரமம் வேண்டாம். இங்கேயே தொழுங்கள். என்று திசை திருப்-பினான். அதே நாளில் பண்டிகை, ஆர்ப்பாட்டம், அலறல், வேடிக்கை! மக்களுக்கு இது போதுமே. தேவன் நமது ஆராத-னையை ஏற்றுக் கொள்கிறாரா, இல்லையா? அந்தப் பற்றி யாருக்குக் கவலை? *(1 ராஜா 12:26-33).*

இன்றைக்கும் அதுவே நிலை. பிழைக்கத் தெரிந்த சில சுய நலவாதிகள், மக்களுடைய மடமையையும், மெத்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தேவனுடைய ஸ்தானத்திற்கு தங்களை உயர்த்திக் கொண்டு மக்களுடைய மனநிலைக் கேற்ப தேவனுடைய நீதிச் சட்டங்களின் வீரியத்தைக் குறைத்து திருத்தம் செய்து மக்கள் கூட்டத்தைச் திரளாய்ச் சேர்த்துக் கொள்கிறார்கள். இவர்-களின் தந்திரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பலரும், புரிந்து கொண்ட சிலர் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாய் கசிந்து வருவதை ருசித்துக் கொண்டும், இரசித்துக் கொண்டும் இப்படிப்-பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித்துக் கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு போலி திருப்தியோடு உலா வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பிக்கப்படுகிற உபதேசங்களில் அநேகம் வேத வசனத்துக்குப் புறம்பானவைகள். மிக முக்கியமானவைகள் என்று

வேதம் குறிப்பிடுகிற சில உபதேசங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதேயில்லை என்பது மிகவும் வேதனையாயிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு அதைச் சுட்டிக் காட்டி அவர்களைச் சரியான பாதையில் போகும்படி ஆலோசனை கூறுவது நியாயம் தீர்ப்பது அல்ல; நல்லெண்ண மன்றாட்டே (யாக் 5:20)

சான்றோர்களே! அரசு அங்கீகாரம் இல்லாத ஒரு பள்ளியில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பீர்களா? அல்லது இரண்டும் இரண்டும் ஐந்து என்றோ, தமிழ்நாடு ஐரோப்பா கண்டத்தில் இருக்கிறது என்றோ ராஜீவ்காந்தி, மகாத்மா காந்தியின் பேரன் என்றோ போதிக்கப்படுகிற பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து அனுப்புவீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். ஆனால் சபையா? அதைப்பற்றி என்ன ஐயா, எல்லாம் இயேசு சாமியைத் தானே கும்பிடுகிறான். மாதாவையும் கும்பிடுகிறானோ, அது அவன் சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே, வேண்டாம், சகோதரனே, சகோதரியே! ஆன்மீகக் காரியங்களை அப்படி அசட்டை செய்ய வேண்டாம். தயவு செய்து லாசரு ஐசுவரியவான் கதையை ஊன்றி வாசியுங்கள் (லூக் 16:27-31 வரை உள்ளதைச் சிந்தியுங்கள்.

இரண்டாவதாக சிறு குழந்தையாக இருக்கும்போது ஞானஸ்நானம் என்ற பெயரால் தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் இருக்கிறேன் என்று எண்ணிக்கொண்டிருப்பது தவறான எண்ணம். மாற்கு சுவிசேஷம் 16:16, ''விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என்று தெளிவாகப் போதிக்கிறது. இதில் இரண்டு தவறான போதனைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டவனுடைய வயதும் புரிந்து கொள்ளும் தன்மையும். (2) திருமுழுக்கு என்று அர்த்தம் கொள்ளும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட முறை.

''விசுவாசமுள்ளவனாகி'' என்றால், சொல்லப்படுகிற சத்தியத்தைப் புரிந்து கொண்டு நம்பிக்கை தெரிவிக்க வேண்டும், அப்படிப்பட்டவர்களுக்கு ஞானஸ்தானம் கொடு என்று பொருளாகும். ஒரு சிறு குழந்தை சொன்னதைக் கேட்டு விசுவாசிக்குமா? புரிந்து கொள்ளுமா? அதற்குத் தான் பெற்றோர்கள் பொறுப்பு எடுக்கிறோமே! என்பீர்கள், அதற்கு எங்கே ஐயா, ஆதாரம்? இயேசு கிறிஸ்துவே முப்பது வயதில் தானே திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? (லூக் 3:23) வேதத்தின் காரியங்களை வேதத்தின்படி செய்வது தானே நியாயம், நம் இஷ்டம் போல செய்து கொள்வதற்கு அதிகாரம் எங்கே? எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்-

டிருக்கிறது என்கிறாரே இயேசு (மத் 28:19) ஆகவே குழந்தை ஞானஸ்நானத்தை இனிமேலாவது கைவிடுங்கள்.

இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கும் முறை திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் என்ற சொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Baptizo (பாப்டிஸோ) என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதற்கு அமுக்குதல், அல்லது மூழ்கடித்தல் என்று பொருள். சிறு குழந்தையில் தலைமேல் இரண்டு சொட்டு தண்ணீர் தெளித்து திருமுழுக்குக் கொடுத்தாயிற்று என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கும் மனப்பக்குவம் இல்லாத பச்சிளங்குழந்தையின் தலை மீது இரண்டு சொட்டுத் தண்ணீரைத் தெளித்து இது தான் ஞானஸ்நானம் என்று நானும் நீங்களும் ஒத்துக் கொண்டாலும் வேத வசனம் ஏற்றுக் கொண்டு இரட்சிப்புத்தருமா? **''ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிடில் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான்'' என்கிறார் இயேசு** (யோவான் 3:5)

ஒருவனுடைய பிரவேசமே தவறு என்று ஆகும்போது அவன் இரஜ்ஜியத்தின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி? **''ஒருவன் மல் யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான்** (1தீமோ 2:5) என்று பவுல் தீமோத்தேயு என்ற இளம்பிரசங்கிக்கு எழுதுகிறார். பந்தையத்தில் முறைப்படி உன்னைப் பதிவு செய்து கொள்ளாமலும் பந்தயம் நடத்தியவரின் நிபந்தனைக்குக் கட்டுப்படாமலும் ஓடினால் பரிசு எப்படிக் கிடைக்கும்? இன்று அனேக கிறிஸ்தவர்கள் முறைப்படி பதிவு செய்து கொள்ளாத ஓட்டக்காரனைப் போல் கர்த்தருடைய உபதேசச் சட்டத்தின்படி செய்யாமல் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பரிசு பெறுவது முடியாத காரியம். ஒருவேளை பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும் நீங்கள் வாசித்து தியானிப்பதால் உங்கள் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பாக இருக்கலாம். அதற்கு நீங்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தான் படிக்க வேண்டும் என்பதில்லை, அழகிய தமிழில் உள்ள திருக்குறள், முஸ்லிம்களின் வேத புத்தமாகிய குரான், ஹிந்து மதத்தினரின் பகவத் கீதை போன்ற நூல்களே கூடப் போதும். இந்த உலகத்தில் மகிழ்ச்சியாக, உல்லாசமாக, ஆரோக்கியமாக, வாழ வேண்டும் அது தானே உங்கள் இலச்சியம்!

வேதாகமம் படிப்பது இம்மைக்காக மட்டுமல்ல (1கொரி 15:19) மறுமையிலும் நாம் கர்த்தாமாகிய இயேசு கிறிஸ்து நமக்கு

ஆயத்தம் செய்திருக்கிற நித்திய வீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் அவருடைய ஆளுகையில் பங்கு கொள்வதற்கும் ஆகும்.

ஆகவே என் நண்பனே, சகோதரியே! உன்னுடைய கிறிஸ்துவ ஓட்டம் வேதாகம உபதேசச் சட்டத்தின்படியும் நிபந்தனைகளின்படியும் பதிவு செய்யப்பட ஓட்டம் தானா? தயவுசெய்து வேதாகமத்தின் வெளிச்சத்தில் அதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். **''நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள்.**

**கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு**

**எல்லாவற்றையும் (தேவனுடைய உபதேசச் சட்டங்கள் அனைத்தையும்) முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்''** (*பிலி 2:14-16*)

E. Z **செல்வநாயகம்**

---

**தப்பாமல் கனி கொடுப்பவன் யார்?**

**கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**அவன் தண்ணீரண்டையில் நடப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும் மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்? எரே 17:7,8.**

---

# தேவனுடைய இஸ்ரவேலர் யார்?

## கலா 6:15-16

1. இராஜீயம் மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலரிடமிருந்து எடுபட்டுப் போயிற்று.

**''ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.''** மத் 21;43

2. மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடையபிள்ளைகளல்ல. — வாக்குத்தத்தின் பிள்ளைகளே தேவனுடைய பிள்ளைகள். ரோமர் 9:8

**''மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகலல்ல. வாக்குத்தத்தின் பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததியென்று எண்ணப் படுகிறார்கள்.**

3. வித்தாகிய (சந்ததி) கிறிஸ்துவில் வாக்குத்தத்தம் நிறைவேறியது கலா 3:16

**''ஆபிரகாமுக்கும் சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே''.**

4. விசுவாசத்தின் மூலமாகவும், திருமுழுக்கினாலும், பிள்ளைகள். கலா 3;27

**''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே**

**ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே''.**

5. ஆபிரகாம் வாரிசு யூதரோ அல்லது புறவினத்தவரோ அல்ல. கலா 3:28, 29

''யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும், பெண்ணென்றும்

இல்லை எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றீர்கள்

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்

6. *எவரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களே ஆபிரகாமின் வாரிசுகள் கலா 3:7*

**''ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்கள்''**

7. *யூதர்கள் என்றழைக்கப்படுவதற்குத் தகுதியில்லாதவர் யாவர்? ரோமர் 2:28*

**''புறம்பான யூதனானவன் யூதனல்ல-தற்கால இஸ்ரவேலரும் அல்ல; புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்த சேனமும் விருத்த சேனமல்ல''**

8. *அப்படியானால் உண்மையான யூதர்கள் யார்? ரோமர் 2:29 ஆவிக்குரிய இஸ்ரவேலர், இருதயத்தில் விருத்த சேதனம் பெற்றோர்.*

**''உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்த சேதனமே விருத்தசேதனம்.**

9. *ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்கிறவர்களே உண்மையான விருத்த சேதனமுள்ளவர்கள் பிலி 3:3*

**''ஏனெனில் மாம்சத்தின்மேல் நம்பிக்கையிலாமல் ஆவியினாலே, தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாரட்டுகிற நாமே விருத்த சேதனமுள்ளவர்கள்''**

10. *கிறிஸ்தவர்கள் தேவனுடைய சொந்த ஜனம், பரிசுத்த ஜாதி 1 பேதுரு 2:9-10.*

''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமசன ஆசாரியக் கூடமாயும், பரிசுத்த ஜாதியும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்....''.

# பாவத்தின் பயங்கரம்

தற்காலத்தில் பாவத்தைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. அது கவலைப்பட வேண்டிய பிரச்சனை என்றும் பலர் நினைப்பதுமில்லை. தங்களுக்கு விருப்பமான, சௌகரியமான எதையும், எப்படியும் செய்யலாம். அதை நியாயப் படுத்துவதற்கு பின்னர் ஆதாரங்களையும், ஆட்களையும் தேடிக் கொள்ளலாம் என்று நினைக்க ஆரம்பித்து விட்டனர். சமீப காலத்தில் மக்களை பயமுறுத்துவது **எய்ட்ஸ்** என்னும் நோய். இந்நோயைப் பற்றி மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர். அந்தக்கவலை இந்த நோயோடு சம்பந்தப்பட்டிருக்கும் ஒழுக்கக் கேட்டினால் சமுதாயம் சீரழிகிறதே என்பதினால் ஏற்படுகிறது கவலை அல்ல. அதற்குப் போதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லையே என்ற கவலையினால் தான். இந்தக் கொடிய நோய், சுபாவத்துக்கு விரோதமான ஆண்புணர்ச்சி காரணமாக உண்டாகிறது என்றும், ஆகவே அவ்விதமான ஒழுக்கக் கேடுகளைச் செய்யலாகாது என்று கடிந்து புத்தி சொல்லி எச்சரிக்கிறார்களா? என்றால் அப்படிப்பட்ட வார்த்தைகளோ, எச்சரிப்புகளோ கிடையாது. ஆண்புணர்ச்சி கடவுளால் வெறுக்கப்படுகிற காரியம். இயற்கைக்கு விரோதமானது என்று கண்டித்து உணர்த்துவதற்குப் பதிலாக அது பால் உறவு கொள்ளுகிற எவருக்கு வேண்டுமானாலும் வரலாம் என்று நியாயப்படுத்துகின்றனர்.

அதே போலக் கருக்கலைப்பு (abortion) அது பாவமான காரியம் என்ற எண்ணம் மறைந்து கொண்டு வருகிறது. சொல்லப் போனால் அப்படிச் செய்யாமல் இருப்பதுதான் சமுதாயத்துக்கு நாம் இழைக்கும் தீங்கு என்று எண்ணத் துவங்கி விட்டனர்.

அது ஒருவகையில் சிசு கொலை. அதற்குப் பதிலாகப் புலன்களை அடக்கி ஆளவும், கருத்தரிக்காமல் இருக்கக் கூடிய தடுப்பு முறைகளைப் பின்பற்றலாம் என்ற உணர்வும் இல்லை. இன்னும் லஞ்சம் அல்லது கையூட்டை எடுத்துக் கொள்வோம். நீங்கள் யாரைக் கேட்டாலும் சரி. அது குற்றம் என்று தயங்காமல் சொல்லுவார்கள். ஆனல் எல்லோருமே அதைச் செய்கிறார்கள். ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ''அது தவிர்க்க முடியாத தீமை'' என்றாவது ஒத்துக் கொண்டார்கள். இன்றைக்கு அது தீமையே அல்ல;

,‘காலத்தின் கட்டாயம்’, ‘தேவைப்படுகிற நடைமுறை’ என்றாகி விட்டது. வர, வர லஞ்சத்துக்கு இரசீதே கூடக் கொடுப்பார்கள் பால் இருக்கிறது.

பல நாடுகளில் சன்மார்க்கத்தைப் பற்றிய போதனைகளை பள்ளிச் சிறுவ சிறுமிகளுக்குப் போதிப்பது கிடையாது. நல்லது எது, கெட்டது எது என்று போதிக்கும் யோக்கியதை யாருக்கும் கிடையாது என்று சிலர் வாதித்துத் திசை திருப்பி விட்டு விட்டனர். அதன் விளைவு என்ன? ஒழுக்கமின்மை, பிறர் பொருள் மீது இச்சை, பொய் ஆகிய ஜென்ம சுபாவங்கள் கட்டுப்பாடின்றி இளைய சமுதாயத்தில் வளர்ச்சியடைந்துவிட்டன. இப்படிச் சில தலைமுறைகள் சென்ற பிறகு அவர்களுடைய வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து பார்த்தபொழுது, பயப்படும் அளவுக்கு நிலைமை போய் விட்டது. இப்பொழுது ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும் என்கின்றனர். அதை அன்று சான்றாண்மையில் அக்கறையுள்ளவர்கள் கூறின பொழுது நிராகரித்தனர். சொல்லப்போனால் பள்ளிகளில் மட்டும் அல்ல; வீடுகளிலேயே தார்மீக, ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும். ஒருவேளை படிப்பறிவில்லாத பெற்றோர்கள் உள்ள வீடுகளில் அது சாத்தியம் இல்லாவிட்டால் கூட அது பள்ளிகளில் போதிக்கப்பட வேண்டியது அவசியம்.

உலகம் ஏற்றுக்கொள்ளுகிறதோ இல்லையோ, உலகில் நன்மையும் தீமையும் கலந்து கிடக்கிறது. சரி என்பவைகளும் உண்டு; தவறு என்பவைகளும் உண்டு, உண்மையும் உண்டு; பொய்யும் உண்டு. எல்லாம் சம அளவிலும் இல்லை. ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது. ஒன்றுக்கு மற்றொன்றைக் காட்டிலும் அதிக கிராக்கியுமுண்டு. அதே போல மனிதர்களிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் உண்டு. நீங்கள் யாரை நல்ல குடிமகன் என்று சான்று பகர்வீர்கள்? யார் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கிறார்களோ அவர்களையே நல்லவர்கள் என்பீர்கள். ஏனெனில் சிறந்த நற்பண்புகள் உண்மை பேசுகிறவர்கள், நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள், எப்பொழுதுமே நல்லவைகளையே செய்ய நாடுவார்கள்.

யாரை மோசமானவர்கள் என்று கூறுவீர்கள்? பாவம் செய்கிறவர்களை. அப்படியானால் பாவம் என்பது என்ன? எதெல்லாம் தீமை பயக்குமோ, கேடுள்ளதோ அவைகளே பாவங்கள். அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக் கேடுகள், பொய்கள், யாவும் பாவப் பட்டியலில் உள்ள சில குணாதிசயங்கள். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய யோவான் பாவத்திற்கு இலக்கணம் கூறுகிறார்: **“பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறு-**

**கிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்''** *(1யோவான் 3:4)* அதன் விளக்கமாவது. தேவனுடைய பிர-மாணம் இலக்கு ஒருவன் அந்த இலக்கைக் குறி வைத்து எய்கிறான். ஆனால் அது தவறி விடுகிறது; ஆகவே பாவம் என்பது ''குறி தவறிய நிலை.'' என்றாகிறது. யோவான் மேலும் கூறுகிறார்: **''அநீதியெல்லாம் பாவம்''** *(1யோவான் 5:17)* வேறு ஒரு இடத்தில் **''பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்-டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்.** *(1யோவான் 3:8)* என்கிறார்

அநேகமாக, மக்கள் பலரும் பாவத்தைப் பற்றிப் பேசினாலோ அல்லது நம்முடைய வாழ்க்கையில் எங்கோ தவறு இருக்கிறது என்று கூறினால் கூடக் கோபித்துக் கொள்கின்றனர். அவர்கள் மனம் போன போக்கில் உல்லாசமாய் வாழ்வதற்கு, பாவம் பற்றிய போதனைகள், அவர்கள் மனச் சாட்சியை குற்றப்படுத்தும் என்ற எண்ணத்தால் அப்படி வெறுப்படைகின்றனர். கொஞ்ச கால-மாகவே, ''உனக்கு நல்லது என்றுபட்டால் செய்; உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால், நிறைவேற்று'' என்ற பாணி மனநிலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் யார் என்ன நினைத்துக் கொண்டு எதைச் செய்-தாலும் பாவத்தின் விளைவுகள் மனுக்குலத்தை அழிவுக்கு இழுத்துச் செல்லும் என்பதில் சந்தேகமே வேண்டாம். பால் உறவில் உள்ள கேடுபாடுகள் ''எய்ட்ஸ்'' மற்றும் பல கொடிய நோய்களைப் பிறப்பிக்கும். பொய் பேசுவது பலவிதமான துன்பங்களைத் தரும். சட்டத்தை மீறுகிறவன் சிறைத் தண்டனை அடைவான். மது அருந்துவது மூளையைப் பாதிக்கிறது. குடித்து விட்டு போதையில் வண்டி வாகனங்களை ஓட்டுகிறவன் நிலை தடுமாறி தனக்கும் மற்றவர்களுக்கும் அபாயத்தை உண்டாக்கு-கிறான். புகை பிடிப்பது நுரையீரலைப் பாதித்து, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு வித்திடுகின்றன, இருதய நோய்க்கும் காரணமாக இருக்கிறது. இப்படியே ஒவ்வொரு பாவத்தினால் விளையும் தீமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒருவேளை ஒருமனிதன் தன்னுடைய பண பலத்தினாலும் புத்திசாலித் தனத்தினாலும் இம்மையில் பாவத்தின் விளைவு களுக்குத் தப்பிக் கொண்டாலும், மறுமையில் தேவனுடைய நியாயத் தீர்ப்பில் அவைகளுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். (2 கொரி 5:10 ரோமர் 2:6) அப்போஸ்தலனாகிய பவுல் **''பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை**

வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வினால் உண்டான நித்திய ஜீவன்'' (ரோமர் 6:23) அவரே, கலாத்தியத் திருச்சபைக்கு எழுதின நிருபத்தில், ''மோசம் போகாதிருங்கள்; தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

தன் மாமிசத்துக்கென்று விதைக்கிறவன் மாமிசத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் (கலா 6:7,8) என்று எழுதுகிறார்.

இப்படி எச்சரிக்கப்பட்டிருந்தும் பெரும்பான்மையான மக்கள் பாவத்தில் மூழ்கிக் கிடப்பதற்குக் காரணம், பாவம் என்றால் என்ன? அதன் விளைவுகள் எப்படிப்பட்டது என்று தெரியாததே என்று சொல்லலாம். அவர்களுக்கு பாவத்தைப்பற்றியும் அதன் கேடுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறி, அதிலிருந்து விடுதலையடையும் மார்க்கத்தையும் கற்பிக்க வேண்டும். பாவம் செய்கிறவர்கள் பிசாசின் பிள்ளைகள் என்று விளக்கி அவனையும் அவனுடைய கிரியைகளையும் அழிப்பதற்காகத் தான் தேவகுமாரன் தோன்றினார் என்றும் சொல்ல வேண்டும். (1 யோவான் 3:8) மேலும், ''உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

ஏனெனில், மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினுடையவைகள் அல்ல, அவைகள் உலகத்தில் உண்டானவைகள்.

''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.''(1யோவான் 2:15-17)

ஆனால் தேவனுடைய சித்தம் என்ன? ''இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார். என்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவம் இல்லை.'' (1யோவான் 3:5) பவுல், ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை, உண்மையும் எல்லா அங்கீகரிப்புகளும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்'' (1தீமோ 1:15) பின்னர் அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், ''அன்றியும் நாம் பெல-

**னற்றவர்களாயிருக்கும் போது, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமருக்காக மரித்தார்.**

**நீதிமானுக்காக ஒருவன், மரிக்கிறது அரிது நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.**

**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன், தம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்''** *(ரோமர் 5;6-8)* மேலும், **''ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி**

**நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி**

**நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், நமது தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.**

**அவர் நம்மைச் சகல அக்கிரமங்களின்று மீட்டுக்கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும், தம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தந்தருளினார்.** *(தீத்து 2:11 14)*

*ஆக, பாவம் என்பது உண்மை. அது உலகத்தில் இருக்கிறது. அது நமக்குள் இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்து, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மாண்டு, நாம் பாவத்திலிருந்து விடுதலையாவதற்கு உதவினார். இது எப்படி ஆகும்? முதலாவது நாம் அவரை விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவே அப்படிச் சொல்லியிருக்கிறார் . . . .* **நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்** *(யோவான் 8:24) நாம் விசுவாசித்த பிறகு நம்முடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டும். ''மனந் திரும்பாமற் போனால் மடிவது திண்ணம் என்கிறார் இயேசு (லூக் 13:3) மனந்திரும்புதல் என்பது ஒன்றைச் செய்வதிலிருந்து நிறுத்துவது அல்ல; போய்க்கொண்டிருக்கிற பாதையை மாற்றி சரியான பாதையில் நடப்பது — அதாவது பாவத்திலிருந்து விடுதலை. பாவம் செய்வதை அறவே விட்டு விடுவதை வற்புறுத்து-*

கிறது. அதன் பிறகு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும் என்று கூறுகிறது. அவர் சொல்வதைக் கவனியுங்கள். **''மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.**

**மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்** (மத் 10:32,33)

இறுதியாக, ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார். அவர் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை **''நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.**

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்''.** (மாற்கு 16:15,16)

பின்னர் பெந்தே கோஸ்தே நாளன்று எருசலேமில் கூடி வந்திருந்த திரளான மக்களுக்கு சுவிசேஷப் பிரகடனம் செய்தார்கள். அதைக் கேட்ட மக்கள் பலபேர், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, நாங்கள் இரட்சிக்கப் பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அதற்கு: **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''** என்று பதில் அளிக்கப் பட்டது (அப் 2:38) மேலும் கீழே 41-ம் வசனத்தில் **''அவர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.** வசனம் 47.ல் **''இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.''** என்று கூறுகிறது.

இப்பொழுது நாம் புரிந்து கொண்டது என்ன? மனுக்குலம் பாவத்துக்குள் மூழ்கிக் கிடக்கிறது. அதனால் மனித வாழ்க்கைக்கு இம்மையில் ஏற்பட்ட இழப்பு ஈடு செய்ய முடியாது. அதோடு

நில்லாமல் மறுமையிலும் நித்திய அழிவைச் சம்பாதித்துக் கொடுக்கக் கூடியது. ஆனால் கிறிஸ்து வானவர் உலகிற்கு இறங்கி வந்து, சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டு உலகத்தின் பாவத்தைப் போக்கத் தம்மை ஒப்புக் கொடுத்தார். இவைகளை எவன் ஒருவன் விசுவாசித்து, அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்படிந்து நடக்கிறானோ அப்படிப்பட்டவனை கர்த்தர் இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். அதாவது நம்முடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறார். தேவனுடைய பிள்ளையாக — கர்த்தருடைய குடும்ப அங்கமாக ஏற்றுக் கொள்கிறார். தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் அவருக்கு உண்மையாக நடந்து கொண்டால் இம்மையிலே மாத்திரமல்ல, மறுமையிலும், சதா காலமும் அவரோடே கூட இருக்கலாம். (வெளி 2:10)

இவைகளெல்லாம் கற்பனை வளம் நிறைந்த ஒரு மனிதனால் புனையப்பட்ட கதை என்று எண்ணுகிறீரா? இவைகளெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? ஆம், நண்பர்களே! இது ஒரு கதை தான். ஆனால் உண்மையாக நடந்த கதை. பாவம் உலகத்தில் இருப்பதையும், அது உண்மையென்றும் நாம் காண்கிறோம். நமக்கும் நம்முடைய நண்பர்களுக்கும், பாவத்தால் ஏற்படுகிற துன்பங்களை நாம் பார்த்துக் கொண்டும், அனுபவித்துக் கொண்டும் இருக்கிறோமே!

அதே போல இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தது உண்மை. அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு அளிப்பார் என்பதும் கூட உண்மை. பரலோகமும் உண்மை. கர்த்தருக்கு உண்மையாய் நடக்கிற அனைவரும் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். அதேபோல நரகம் இருப்பதும் உண்மை பாவாழ்க்கையில் உழன்று மரிக்கிறவர்கள் அங்கே சென்று வேதனை அடைவார்கள் என்பதும் உண்மை.

ஆகவே, நீங்கள் இவைகளையெல்லாம சிந்தித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பாவமா, மன்னிப்பா? இரட்சிப்பா, இழப்பா? மோட்சமா, நரகமா? இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் புத்திமான்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்பதே எங்கள் மன்றாட்டும் ஜெபமும்.

J.C. சோட்

# கெட்டுப்போகிற நல்ல குமாரன்

கெட்டகுமாரன் மக்கு நன்கு அறிமுகமான ஒரு நண்பர். இவரை குறித்து அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் பலவிதங்களில் நமக்கு உதவியாய் இருக்கிறார். செய்தியை முன் கூட்டியே ஆயத்தம் செய்யாத தொழில்முறை ஊழியர்களுக்கு அவர் உடனடி உதவியாக கை கொடுக்கிறார். செய்தியாளரும் இவரைப் பற்றி பிரசங்கித்தே காலத்தை ஓட்டுவதுமட்டுமின்றி பாராட்டும் பெறு-கிறார்!

ஆனால், அதே வீட்டிலிருக்கும் நல்ல குமாரனை பற்றி நமக்கு தெரியாமலிருப்பது வேதனையே. அவரை நாம் கண்டு கொள்வதே-யில்லை. ஒரு வேளை இனம் இனத்தோடு சேரும் என்பது காரண-மாய் இருக்குமோ என்னவோ தெரியவில்லை. ஆண்டவர் இயேசு லூக்கா 15-ஆம் அதிகாரத்தில் விளக்கியுள்ள தொடர் உவமைகளின் நோக்கம் அல்லது கருத்தை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அன்றைய யூத சமுதாயத்திலிருந்த பரிசேயர், வேத பாரகர் என்னும் சமயவாதிகள் தங்கள் சுய நீதியினால் பெருமையடைந்து ஆண்டவரை வெறுத்து ஒதுக்கினர். ஆனால் ஆயக்கார-ரும் பாவிகளும் தங்கள் பாவ சீரழிவை உணர்ந்து ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். மேலும் ஆண்டவர் காமானிய மக்களுடன் நெருங்கி பழகியதைக் கண்ட சமய சந்தர்ப்ப வாதிகள் முறுமுறுத்-தனர். அவர்களுடைய போலி பக்தி வேடத்தை ஆண்டவர் பல இடங்களில் கடிந்து கொண்டார். *(லூக் 5:29-32, மத் 23:13)*

மனுக்குலம் முழுவதும் பாவத்தில் விழுந்து, தேவனை விட்டு பிரிந்துபோய், சீரழிந்து, மீண்டும் அவரிடம் வரும் போது, தேவன் அவர்களை தமது மிகுதியான அன்பினால் ஏற்றுக் கொள்கிறார் என்பதை இளைய மகனின் உவமை உணர்ச்சிபூர்வமாக விளக்கு-வதாக பொருள் கொள்ளலாம். இந்த அடிப்படையில் நல்ல மகனை கெட்டு போகாமல் வீட்டில் அடங்கியிருக்கிறவனாக பார்க்கமுடியும்.

இவர்கள் இருவரும் இருவகை மக்களின் பிரதி பிம்பங்கள். தகப்பன் வீட்டை விட்டு வெளியேறிப் போய் கெட்டழிந்து திருந்தி விட்டவன் ஒருவன். வீட்டிலிருந்தபடியே கெட்டுப்போய்க் கொண்-டிருக்கிறவன் மற்றொருவன். சபையின் ஒழுங்கு நடவடிக்கையால் திருந்தி விட்டவர் ஒருவர். ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட வேண்டிய நிலையில் (ஆனால் பிடிபடாமலேயே) இருக்கின்றவர் மற்றொருவர்.

கெட்டுபோய் திருந்தி வந்து விட்டவனோடு ஒப்பிடும்போது, நல்லவன் என்ற போர்வையில் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறவனே உண்மையில் கெட்டவனாக இருக்கிறான். கர்த்தரை அறியாத புறம்பான பாவியை விட கர்த்தரை ருசித்தும் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவன் அதிக ஆக்கினைக் குரியவனாய் இருக்கிறான். புறம்பான பாவி மனந்திரும்ப வாய்ப்பு உண்டு. ஆனால் ஊழியன் என்ற போர்வையில் கிறிஸ்தவன் என்ற பெயரில் ஏதோ தனக்கு ''உரிமம்'' கிடைத்துவிட்டதாக நினைத்துக் கொண்டு பாவத்தில் வாழ்கிறவனின் நிலை, **பரிதாபமே!** இவர்கள் மனந்திரும்புவதற்கேதுவாக புதுப்பிக்கப்படுவது இயலாத ஒன்று. *(எபி 6:4-8, 10:26-29)*

இந்த கோணத்தில் சீரழிந்துவரும் இன்றைய கிறிஸ்தவத்திற்கு, வீட்டிலிருந்தபடியே கெட்டுப்போய்க் கொண்டிருந்த மூத்தமகனை உருவகப்படுத்தலாம். வீட்டிலிருந்த கெட்ட குமாரனுடைய மன நிலை கிறிஸ்தவத்தின் சீரழிவை நன்கு பிரதிபலிக்கிறது. ஆகவே அவனுடைய மனநிலையை இன்றைய கிறிஸ்தவ சூழலுடன் ஒப்பு நோக்கி சில கருத்துக்களை ஆய்வு செய்வோமாக.

**முதலாவதாக,** தகப்பன் வீட்டில் என்ன நடக்கிறது என்பது தகப்பனோடிருந்தவனுக்கு தெரியவில்லை. *(லூக் 15;25-26)* சபை ஜீவனுள்ள தேவனுடைய வீடு. *(1தீமோ 3;15)* அவனை போலவே இன்றும் நம்மில் பலருக்கு சபையில் என்ன நடந்து வருகிறது என்பது தெரிவதில்லை. சிலருக்கு சபையின் வாரந்திர நிகழ்ச்சிகள், ஊழிய திட்டம் பற்றி ஒன்றும் தெரிவதில்லை. இன்னும சிலர் என்ன பிரசங்கம் நடக்கிறது என்று தெரியாமலேயே தூங்காமல் தூங்கி சுகம் காண்கின்றனர். சபையில் என்ன நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது சில வேளைகளில் ஊழியருக்கே தெரிவதில்லை. எவைகளைச் செய்ய வேண்டும் என்பதும் அவருக்கு புரிவதில்லை. அவரை பொருத்தமட்டில், ஏதோ ஆராதனைக்கு சிலர் வந்தால் அதுவே பெரிய காரியம்.

ஆத்துமாக்களை இரட்சிக்கவல்ல சுவிசேசம் அறிவிக்கப்படுவதற்கு தேவன் சபையைதான் நம்பியிருக்கிறார். *(எபேசி 3:9-10)* சபை இப்பணியை செய்யாவிட்டால், இவ்வரிய பணி செய்யப்படாமலேயே இருக்கும். கர்த்தர் சபையினிடத்தில் திரளான மக்களுக்குரிய இரத்தப்பழியைக் கேட்பார். *(அப் 20:26-27)* சபை சத்தியத்திற்கு காணும் ஆதாரமுமாய் இருக்கிறது. *(1தீமோ 3:15).* தேவனை மகிமைப் படுத்த வேண்டிய சபை, இப்பணியை செய்ய தவறுமானால் அவரை துக்கப்படுத்துகிறது. *(எபே 3;21)*

சபை உலகோடு உறவாடி, தமது தூய நிலையை இழக்குமானால், மணவாளனாகிய கர்த்தருக்கு துரோகம் செய்கிறது. (11கொரி 11:1-3) சபையார் ஞாயிறு ஆராதனையில் 1 மணிநேரம் அமருவதோடு தங்கள் கடமை தீர்ந்துவிட்டது என நினைக்கின்றனர்.

மிஷினரிகள் வரும் போது, கூட்டம் கூட்டுவதையே ஊழியமாக கொண்டவர்கள், சபையார் ஊழியத்தில் பங்கேற்பது பற்றியோ அல்லது பக்தி விருத்தியடைவது பற்றியோ கவலை படுவதில்லை.

மேலும், சபையார் தன்னிறைவு பெற்றுவிட்டால், எங்கே தங்களுக்கு ''கிராக்கி'' இல்லாமல் போய்விடுமோ என்று பயப்படும் ஊழியர் சபையாரின் வளர்ச்சியில் அக்கரை செலுத்துவதில்லை. ''நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்க தக்க உண்மையுள்ள மனுஷரிடத்தில் ஒப்புவி'' (2தீமோ 2:1-2). ''எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு .... உபதேசம் பண்ணுகிறோம். (கொல் 1:28) ''தீக்குருவி'' ஊழியர்களே மனந்திரும்பு வீர்! (யோபு 39: 13-16, எரே 17:11). பரம தகப்பனுடைய வீட்டின் மகிமையையும், அதில் உங்கள் பொறுப்புக்களையும் உணர தேவன் கிருபை செய்வாராக!

**இரண்டாவதாக,** தகப்பன் ஏற்றுக்கொண்ட தனது சகோதரனை தான் ஏற்றுக் கொள்ள மனமின்றி அவனை விமரிசனம் செய்தான். (லூக் 15:30).

அவனுடைய மன நிலை இன்றும் சபைகளில் காணப்படுகிறது. பெலவீனமான சகோதர சகோதரிகளை தேவன் அதிகம் நேசிக்கிறார். அவர்களை மன்னித்து மறந்து விடுகிறார். (1கொரி 12: எபி 8:12,10:17-18) சில நேரங்களில் ஊழியரும், சபையார் சிலரும் மேற் சொன்னவர்களின் கடந்த கால பெலவீனங்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கெதிராக அவித பயன்படுத்த விரும்புகின்றனர். கிறிஸ்தவத்தின் இப்போதைய தேவை, **ஒற்றுமையும், பெலவீனரை தாங்கும் ஆவியே!** எஜமானிடத்தில் 500 வெள்ளி காசு கடன் தள்ளுபடி சலுகை பெற்றவன் தன்னிடத்தில் 50 வெள்ளிகாசு கடன் பட்டவனை கழுத்தை நெரிப்பது சரியா? (லூக் 7:40-43) இவனுடைய மனநிலை சபையின் ஒழுங்கு நடவடிக்கைகளிலும் தெளிவாய் தெரிகின்றன. சபை ஒழுங்கு நடவடிக்கையின் நோக்கமே சம்மந்தப்பட்டவர் மனந்திரும்புவதும், பிறர் எச்சரிப்படைவதும் தான் சில நேரங்களில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுபவர்கள் மீண்டும் மனந்திரும்பி வருவதை சபையோ தனி நபரோ விரும்பாததால் அவர்களிடம் ''சபை பக்கம் தலை வைத்து

படுக்க மாட்டேன்'' என அறிக்கை பெறப் படுவது முற்றிலும் வசனத்திற்கு முரணானது. (2 தெச 3:14-15,) (2 கொரி 2;6-7). விபசாரத்தில் பிடிக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்க இயேசுவினிடம் நீதிகேட்டு வந்தவர்களின் மன நிலை மாறவேண்டும். பெண்ணை பிடித்தவர்கள், ஆணை ஏனோ விட்டு விட்டார்கள்!! (யோவா 8:3-11) ''ஒருவருக்கொருவர் தயவாயும்...... கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசி 4;32) எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாய் இருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்''. (1 பேது 4;8). தேவன் மன்னித்து, ஏற்றுக் கொள்பவர்களை நாம் தவறியும் நிராகரித்து விடக்கூடாது.

**மூன்றாவதாக**, கெட்டவனுக்கு தான் காரியங்கள் சாதகமாக அமைகின்றன, நல்லவனுக்கு காலமில்லை என்ற சோர்வு நிலை அவனிடம் இருந்தது. (வசனம் 29-30) இந்த விதமான எண்ணம் இன்றும் பல கிறிஸ்தவரை சோர்வுறச்செய்கிறது. ''ஆசீர்வாதம்'' என்ற வார்த்தையை சில நேரங்களில் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்கிறோம். உலக மக்கள் அல்லது சந்தர்ப்பவாதிகளின் பொருள் குவியலை பார்த்து தேவன் அவர்களை ஆசீர்வதித்திருப்பதாகவும் நம்மை ஆசீர்வதிக்கவில்லை என்றும் முறுமுறுக்கிறோம். சாத்தான் இந்த சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அதோ, அந்த உலக மனிதனை பார், எத்துணை செழிப்பு, இதோ! இந்த தொழில்முறை ஊழியரை பார், எத்துணை பொருள் குவியல், நீ தேவனுக்கு உண்மையாய் ஊழியம் செய்து என்னத்தை சாதித்தாய் என்று கேட்டு வெறுப்பேற்றுகிறான். அவனுடன் சேர்ந்து கொண்டு ஊழியரின் துணைவிமார்கள் திருமதி யோபுவின் முன்மாதிரியை பின்பற்றத் துவங்கி விடுகின்றார். (யோபு 2:9) கர்த்தருக்கு உண்மையாய் இருப்பதில் பலனில்லை என்ற முடிவு தவறானது. தாவீதும் இப்படி சிந்தித்துப் பார்த்து, பின்னர் தமது கருத்தை மாற்றி கொண்டதாகக் கூறுகிறார். (சங் 73:3-19)

இவைகள் எனக்கு கிடைக்கவில்லையே என்று வருந்துவதை விட, கிடைத்துள்ளவைகளை முறையாக பயன்படுத்துவதே விவேகம். (லூக் 16:10)

தேவன் கொடுத்துள்ள கிருபைகளை குறித்துநாம் பெருமையடைய முடியாது. குறிப்பிடும்படியான சிறப்பு தன்மை எதுவும் ஒருவருக்கு இருக்குமானால், அது தேவன் அவருக்கு போட்ட பிச்சையே. ஆகவே அதிகாரம், அந்தஸ்து, வெளிநாட்டு செல்வாக்கு ஆகியஇவை களை, வைத்துக் கொண்டு பிறரை மிரட்டவும், இழிவுபடுத்தவும்

சுயநலத்தை பேணவும் பயன்படுத்தக்கூடாது. (2 கொரி 13;10). தேவன் அவைகளை திரும்பபெற வெகு காலம் ஆகிவிடாது. (1 சாமு 15:26-28) இவைகளை கர்த்தரை சேவிக்க கிடைத்த சிலாக்கியமாக மட்டும் கருத வேண்டும். மேலும் ''எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும். மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய் கேட்ப்பார்கள்''. (லூக் 12:48).

ஆகவே குறைவாய் பெற்றவர் இழப்படைவதுமில்லை. அதிகம் பெற்றவர் ஆதாயமடைவதுமில்லை. இருவருமே தாங்கள் பெற்றுக் கொண்டதற்கான உக்கிராணக் கணக்கை தேவனுக்கு கொடுத்தாக வேண்டுமே. இதில் முன்னவரின் பணி சற்று சுலபமானது. கிறிஸ்துவுக்குள் தேவன் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்துள்ளதை உணர்ந்து அவரை போற்றுவோமாக. ''ஆசீர்வாதம்'' என்ற வார்த்தையை தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டு நம்மிடமில்லாத பிறரிடமுள்ள சில காரியங்களுக்காக, மூத்த மகன் "ஒரு ஆட்டுக் குட்டியையாகிலும் கொடுக்கவில்லையே'' என வருந்தியது போல புலம்பாதிருப்போமாக அவர் நமக்கு ஆயத்தமாக்கி வரும் பரம இராஜியத்தை எண்ணி அதை சுதந்தரிக்க பாடுபடுவோமாக! பண ஆசை, பொருளாசை ஆகியவைகளின் பயங்கரத்தை உணர்ந்து, சமநிலை பிரமாணத்தின்படி எந்த நிலையிலும் மன ரம்மியமாய் வாழ கற்றுக் கொள்வோமாக (லூக் 12:15, 1 தீமே 6:6-10, பிலி 4:11-12 2 கொரி 8;14-15)

கடைசியாக தகப்பன் வீட்டில் தனக்கிருந்த சுதந்திரத்தை அறியாமல் இருந்தான். ''மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது'' என்று சொல்லி தகப்பன் அவனை தேற்றவேண்டியதாயிற்று. (லூக் 15:31), அற்ப ஆட்டுக்குட்டி கிடைக்காத அதிருப்தியில், தகப்பன் வீட்டில் தமக்கிருந்த மற்ற மேன்மைகளை மறந்து விட்டது எத்துணை மதியீனம்! விபரீதம்.

உலகியல் மற்றும் பொருளியல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் நாமும் இப்படித்தானே சலிப்படைகிறோம்! தேவன் நமது தகுதிக் குறைவிலும் நமக்கு கொடுத்துள்ள கிருபைகளை எண்ணிப் பார்க்க தவறி விடுகிறோம்! இல்லாதவைகளுக்காக புலம்பும் நாம் பெற்றுக் கொண்டவைகளுக்காக நன்றியோடு ஜீவிக்கிறோமா? நாம் எதை எதிர்பார்த்து கர்த்தரை சேவிக்கிறோம்? (1கொரி 15:19) மக்கள் எதை எதிர்பார்த்து ஞானஸ்நானம் பெறுகின்றனர்? அல்லது ஊழியர் ஏன் தமது அறிக்கையில் அதிக ஞானஸ்நான புள்ளி விவரங்களை கொடுக்க விரும்புகிறார்?

உலகியல் தாக்கத்தால் நாமும் நமது பரம பிதா தமது நித்திய வீட்டில் நமக்கு வைத்துள்ள மகிமையை மறந்து விடுகிறோமல்லவா? ''பிரியமானவர்களே ...... நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1யோவா 3:1-2) அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள்ஒழிந்து போயின என்று விளம்பினது'' (வெளி 21:4). இவ்வுலகில் விருப்பத்தோடு துன்பங்களை அனுபவித்த பவுல் நித்தியத்தில் தனக்கிருந்த பலனை அறிந்திருந்தார். ''இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.'' (2தீமோ 4 : 7-8)

தேவன் தமது வீட்டில் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு வைத்துள்ள சுதந்திரத்தை அறிந்து பரவசமடைவோமாக.

பிரியமானவர்களே! கெட்டு போகிற நல்ல குமாரனின் தீய பண்புகள் நம்மைவிட்டு அகலுவதாக! வீட்டு பெருச்சாளியை போல உள்ளிருப்பு கலாட்டா செய்த அவனுடைய ஆவியின் அலைக்கழிப்பு நீங்குவதாக! நமது தகப்பனுடைய வீட்டின் நடவடிக்கைகளை அறிந்து பங்கேற்போமாக! பரம பிதா அங்கீகரித்து ஆதரிக்கிறவர்களை அலட்சியபடுத்தாதிருப்போமாக! நமது உத்தமத்திற்கேற்ற பலனை தேவன் தருவதில்லை என்ற எதிர்மறை எண்ணம் நீங்குவதாக! நாம் தேவ சித்தத்திலமைந்து செயல் படும் போது தேவன் இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் நமக்கு நமது குமாரனுக்கொப்பான மகிமை தருகிறார் என்பதை உணர்ந்து, திருந்துவோமாக!

கர்த்தர் தாமே நம்மை செம்மைபடுத்தி, ஆசிர்வதிப்பாராக!

ஆமேன்

## அநியாயமாய் ஐசுவரியத்தைச் சேர்க்கிறவன் கதி

**அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு, அவயங்காத்தும், குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான். அவன் தன் பாதி வயதிலே அதை விட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான். எரே 17:11**

# இரட்சிக்கப்பட்டவர்கள் கிருபையினின்று வீழ்ந்து போதல் சாத்தியம்

சாத்தான் நரித்தந்திரக்குணம் படைத்தவன். பொய்யை உண்மை போல ஜோடித்து, பலரையும் நம்ப வைத்து காலை வாரி விடுவதில் கைதேர்ந்தவன். நண்பனைப் போல நடித்து காலடியில் குழி பறிப்பவன். அவனுடைய திருவிளையாடல்களில் பிரபலமானது, தேவனுடைய சத்திய வசனத்தை எடுத்துக் கொண்டு அதில் சிறியதோர் புரட்டு வேலை செய்வது. சத்தியத்தைப் போலவே அவை ஒலிக்க வேண்டும்; மக்கள் அவற்றை நம்ப வேண்டும். இதற்குத் தேவையான அளவில் சிறு திருகு வேலை மட்டுமே அவன் செய்வதால், பலர் சாத்தானுடைய பொய்யை சத்தியமென்று நம்பி ஏமாந்து போகின்றனர். ஏதேன் தோட்டத்தில் நடந்ததும் இதுவே. முதன் முதலில் மனிதனை சாத்தான் ஏமாற்றியதும் அங்கே தான். விளைவாக உலகில் பாவமும் தோன்றிற்று. ஆதாமிற்கு தேவன் இட்ட கட்டளையைப் பாருங்கள். **''நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்; ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்''** (ஆதி 2: 16-17). மேற்சொன்ன கட்டளையை சாத்தான் எவ்வாறு திரித்துக் கூறுகிறான் எனக் கவனியுங்கள். ''நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? **நீங்கள் சாகவே சாவதில்லை.** நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்'' (ஆதி 3:1, 4-5) தேவனுடைய கட்டளையோடு சாத்தான் சேர்த்தது ஒரு சிறிய வார்த்தையைத்தான். அந்த ஒரு வார்த்தை மனுக்குலம் முழுவதையும் காலா காலமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறதே!

விழிப்பில்லாத மக்களை ஏமாற்ற இன்னும் இதே தந்திரத்தைத் தொடர்ந்து உபயோகிக்கிறான் சாத்தான். தேவன் இல்லையென்றோ, இரட்சிப்புக்கு அவர் ஒரு திட்டம் வகுத்துத் தந்துள்ளார் என்பதை மறுத்துக் கூறியோ மக்களிடம் அவன் மாட்டிக் கொள்வதில்லை. ஆனால் இரட்சிப்பின் திட்டத்தில் முக்கியப் பகுதிகளில் சிறு புரட்டு வேலைகளைச் செய்து வைக்கிறான். கிருபை பற்றிய கோட்பாட்டில் சாத்தான் செய்துள்ள திருட்டு

வேலையைக் காண முடிகிறது. வேதாகமத்தில் கிருபை சம்பந்தப்பட்ட வசனங்களை நாம் கவனமாகப் படிக்கும்போது, வசனத்திற்குக் கீழ்படிந்து தேவனின் கிருபையை ஏற்றுச் கொண்டு பாவ மன்னிப்புப் பெற்றிருந்த போதிலும் மீண்டும் பாவங்களைச் செய்யும் மனிதன் கிருபையிலிருந்து வீழ்ந்து போகவும், நித்திய அழிவைத் தேடிக் கொள்ளவும் கூடும் என வேதாகமம் தெளிவாகப் போதிப்பதைக் காண முடிகிறது. ஆனால் சாத்தானுடைய "வேதாகம்' த்தைப் பாருங்கள்; ''ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொண்டால், தொடர்ந்து பாவங்களைச் செய்த போதிலும், ஒரு போதும் கிருபையினின்று வீழ்வதும் இல்லை; நித்திய அழிவை அடைவதுமில்லை''. பள்ளியில் ''அட்மிஷன் ''பெற்றுக் கொண்டால் போதும் படிக்க வேண்டியதில்லை. 'பாஸ்' உறுதி என்று கூறுகிற சில கல்வி நிலையங்களின் மோசடி விளம்பரங்களைப் போன்ற பாணி.

இப்போது வேதாகமம் கூறுவதைக் கவனிப்போம். புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில், 21 புத்தகங்கள், கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்கள். அதாவது, ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களுக்காக அவை எழுதப்பட்டவை. உதாரணமாக, ரோமர் 6:17ல் பவுல் எழுதுகிறார்: **''முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்''**. வேறு விதமாகக் கூறினால், ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களுக்காக பவுல்எழுதுகிறார். கவனியுங்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கிருபையில் இருந்து வீழ்ந்து போகும் சாத்தியம் இல்லாவிட்டால் **''நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேடம் தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்''** என பவுல் (ரோமர் 12 : 2) ஏன் எழுதுகிறார்? அதே பவுல், **''நீ தீமையினாலே வெல்லப்படாதே ''**(ரோமர் 12:21) என கூறுகிறார். மீண்டுமாக ரோமர் 13 : 14ல் **''துர் இச்சைகளுக்கு இடமாக உடலை பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்''** என அவர் கூறுகிறார். மேற்கண்ட எல்லா வசனங்களாலும், இரட்சிக்கப்பட்ட அவருடைய வாசகர்களை தீமையால் அவர்கள் வெல்லப்படக்கூடும் என பவுல் எச்சரிக்கிறார்.

மற்றுமோர் உதாரணத்தைப்பார்ப்போம்: 1 கொரிந்தியர் புத்தகமானது கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்காக (1:2) எழுதப்பட்டது. அவர்கள் 'கிறிஸ்துவுக்குள்' இருக்கின்றனர்; எனவே அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள்.

அப்படியிருக்க, இந்நிருபத்தை எழுதிய அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையில் நிலவிய கற்புக்கு விரோதமான ஒழுங்கீனங்களைப் பற்றிக் கவலை தெரிவிப்பானேன்? **''சகோதரன் எனப்பட்ட ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, விக்கிரகாராதனைகாரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவும் கூடாது.''** என (1 கொரி. 5 : 11) பவுல் கூறுவானேன்?

மீண்டுமாக ஒரு உதாரணம் : **நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்''** என எபி. 10:23ல் எபிரேயருக்கு எழுதிய நிருபம் கூறுவதென்ன? சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிற (எபி 10;26) கிறிஸ்தவர்களை எச்சரிப்பதேன்? வரப்போகும் அபாயங்களை மக்களுக்குத் தெரிவிக்கும் சாலை அறிவிப்புகள் போன்றவை எச்சரிக்கைகள். எச்சரிக்கைகளை அலட்சியப் படுத்துவோர் தங்களுக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்ளுகிறார்கள் அல்லவா?

சோதனையில் வீழ்ந்து போகிறவன் எதையும் இழப்பதில்லையென்றால் **சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான்''** யாக்கோபு (யாக் 1:12) ஏன் கூறுகிறார்? இரட்சிப்புக்கு கிருபை மட்டுமே போதுமானதாக இருப்பின், **''விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்ததாயிருக்கும்''** (யாக் 2:17) என அவர் குறிப்பிடுவதேன்? சத்தியத்தை விட்டு விலகிப் போனவனை திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை இரட்சிப்பதாக (யாக் 5:19,20) யாக்கோபு கூறுகிறாரே! ஒருவன் விலகிப் போவதோ, வீழ்ந்து போவதோ சாத்தியம்; அப்படிப்பட்டவன் **அழிந்து** போகவும் கூடும் என்பதையே இவ்வசனங்கள் நமக்குத் தெளிவாக போதிக்கின்றன.

**''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்''** என யாக்கோபும் (4:7) பேதுருவும் (1பேதுரு 5:8) கிறிஸ்தவர்களுக்குக் கட்டளையிட வில்லையா? ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பினும் பிசாசின் வலையில் சிக்கி வீழ்ந்து போகக்கூடும் என்பதால்தானே அவ்வாறு கட்டளையிட்டனர்?

**''உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்''** என யோவான் (1 யோவா 2:15) கூறுவதேன்? அவரின் கூற்றுச்கு விடை அவ்வசனத்தின் இறுதிப் பகுதியில் காணப்படுகிறது. **''ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்-**

**தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை''**. தன்னிடம் பிதாவின் அன்பில்லாத ஒருவன் எவ்வாறு இரட்சிப்பில் நிலைத்திருக்கக் கூடும்?

மேற்சொன்ன எல்லா அறிக்கைகளும் எச்சரிக்கைகளும் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டவை, ஒரு கிறிஸ்தவன் கிருபையில் வீழ்ந்து போகக் கூடாதாகின் மேற் சொன்ன எச்சரிக்கைகள் எதுவும் தேவை இல்லை. அவை தேவனிடத்திலிருந்து வந்த செய்திகளாக இருப்பதால், அவை தேவையற்றவையாக இருக்க முடியாது. கிறிஸ்தவர்கள் கிருபையினின்றும் வீழ்ச்சியடையக் கூடும். நமது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இல்லாது போனால் நாம் கிருபையினின்றும் வீழ்ந்து போவோம்; ஆத்துமாவையும் இழந்து போவோம்.

சாத்தானின் தந்திரங்களை முறியடிப்போம்; சத்திய வசனங்களை முழுமையாய் ஏற்றுக் கொண்டு அவைகளின்படி கவனமாக நடப்போம். ஆத்துமாவைக் காத்துக் கொள்வோம்.

**S.S. ராஜன்** **பிலிப் C. வில்கெர்சன்**

## (28-ம் பக்கம் தொடர்ச்சி)

8. ஒருவன் ஞானஸ்நானம் இல்லாமல் இரட்சிப்படைய முடியும் என்றால் 1பேது 3:21க்கு என்ன பொருள்? ஞானஸ்நானம் .... இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது என்று கூறுகிறதே.

9. ஒருவன் ஞானஸ்நானமில்லாமல் இரட்சிப்படைய முடியும் என்றால் இரட்சிக்கப்பட்டவர்களை சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்று சொல்லுவானேன்? (அப் 2:47) ஞானஸ்நானம் ஒருவனை சபைக்குள் கொண்டு வருகிறது என்பதால் தானே. (1கொரி 12:13)

# நீங்கள் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமோ?

**"…. எந்த மனிதனால் மனித குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனிதனுக்கு ஐயோ; அந்த மனிதன் பிறவாதிருந்ததினானால் அவனுக்கு நலமாயிருக்கும்"** (மத். 26:24), என இயேசு கிறிஸ்து வேதனைப்பட்டார். ஏன் சில மனிதர்கள் பிறவாதிருந்தாலே நலமாயிருக்கும்? ஏனெனில், பாவ வாழ்க்கையில் ஊறிப்போன மனிதனுக்குக் கிடைக்கும் தண்டனை அவன் இவ்வுலக வாழ்க்கையில் அவன் அனுபவித்து மகிழ்வதாக நினைக்கும் எல்லா இன்பங்களைக் காட்டிலும் பயங்கரமானதாக இருக்கும் என்பதாலேயே இயேசு கிறிஸ்து அவ்வாறு கூறினார். (எபி. 10:26-31)

பாவ வாழ்க்கையில் மகிழ்ச்சி கொண்டு எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்காத எவனும் ஞானவான் அல்ல. எல்லாருமே கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தப்பட்டு அவரவர் கிரியைகளுக்கு ஏற்ப நியாயந் தீர்க்கப்படுவர். (வெளி. 20:12). கிறிஸ்துவால் இரட்சிக்கப்படாத ஒவ்வொருவனும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான். (வெளி 20:15)

**எப்படிப்பட்டவர்க பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்?**

**1) கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த துரோகி :**

காட்டிக் கொடுத்த கயவன் யூதாஸைப் பற்றியே இயேசு குறிப்பிட்டார் என்ற போதிலும், இன்னும் எவனொருவன் பணத்துக்காகவும், புகழுக்காகவும், வசதிகளுக்காகவும் கிறிஸ்துவை விற்று விடுகிறானோ (காட்டிக் கொடுக்கிறானோ) அவனும் யூதாஸைப் போன்ற கேவலமான பிறவியே. அவருடைய சபையையும் அவருடைய மக்களையும் காட்டிக் கொடுப்பவனும் யூதாஸைப் போன்றவனே.

**2) தேவனை மறுக்கும் நாத்திகன் :**

இப்படிப்பட்ட அவிசுவாசிகள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். (வெளி. 21:8)

**3) கிறிஸ்துவின் விரோதிகள் :**

"கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரானவர்களின் முடிவு அழிவு" (பிலிப். 3:18-19). தேவனுக்கு விரோதமாக, கிறிஸ்து-

வுக்கும் அவருடைய வார்த்தைக்கும் விரோதமாக, அவருடைய சபைக்கு விரோதமாக செயல்படுவோருக் கெல்லாம் ஐயோ; இப்படிப்பட்டவர்களுக்கு எதிராக கிறிஸ்து தன் வாயின் பட்டயத்தால் அவர்களுடன் யுத்தம் செய்வார். (வெளி. 2:16)

**4) அவரை அவமதிக்கும் மாயக்காரன் :**

''மாயக்காரனின் ஆத்துமாவை தேவன் எடுத்துக்கொள்ளும் போது, அவன் நம்பிக்கை என்ன? ஆபத்து அவன்மேல் வரும் போது, தேவன் அவன் கூப்பிடுதலைக் கேட்பாரோ?''

- (யோபு 27:8)

**''சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித்தப்பித்துக்கொள்வீர்கள்?''** (மத் 23:33)

**5. அவருடைய சபையை கூறுபோடும் பிரிவினை வாதிகள் :**

**''வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொரு தரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு. அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னில் தானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாகப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே''** (தீத்து 3 : 10 - 11). பிரிவினைகளும், மார்க்க பேதங்களும், மாம்சத்தின் கிரியைகள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை. (கலா 5:19-21)

**6) அவரை மறுதலித்து ஒதுக்கிப் போகிறவன்**

''.. அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். (2பேதுரு 2:20,21).

இப்படிப்பட்டவர்கள் பிறவாதிருந்தால் நலமாயிருந்திருக்கும். உங்கள் முடிவு உங்கள் கையில் தான் இருக்கிறது.

நீங்கள் பிறவாதிருந்தால் நலமாயிருந்திருக்குமோ? பயங்கரமான இந்தக் கேள்விக்கு என்ன விடை தரப்போகிறோம்?

**S.S.R.**

**ஜான் வேடி**

# ஒருவன் திருமுழுக்குப் பெறாமல் இரட்சிப்படைய முடியுமா?

1. கிறிஸ்துவுக்குப் புறம்பாக ஒருவன் இரட்சிப்படைய முடியுமா? ஒருவன் திருமுழுக்குப் பெறாமல் இரட்சிக்கப்பட முடியுமானால் இதுவும் முடியும். ஏனெனில் ஞானஸ்நானம் ஒருவனைக் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளச் செய்கிறது. கலா 3:27

2. ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளாமல் இரட்சிப்படைய முடியுமா? ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிப்படையக் கூடுமானால் இதுவும் கூடும். ஏனெனில் ஞானஸ்நானத்தில் ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறான். கலா 3:27

3. ஒருவன் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்படாமல் இரட்சிப்படைய முடியுமா? ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிப்படையக் கூடுமானால். இதுவும் கூடும். ஏனெனில் ஞானஸ்நானத்தில் ஒருவன் கிறிஸ்துவோடு அடக்கம் ஆகிறான். (ரோமர் 6:3-4)

4. ஒருவன் கிறிஸ்துவோடு எழுந்திருக்கா விட்டால் அவன் இரட்சிப்படைய முடியுமா? ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிப்படையக் கூடுமானால் இதுவும் ஆகும். ஏனெனில் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவோடு அடக்கம் ஆகுதல் மட்டும் அல்ல; கிறிஸ்துவுடனே கூட எழுந்திருப்பதும் ஆகும்.

5. ஒருவன் கிறிஸ்துவின் சரீரத்துக்குப் புறம்பே இரட்சிப்படைய முடியுமா? ஒருவன் ஞானஸ்நானமில்லாமல் இரட்சிப்படைய முடியுமானால் இதுவும் முடியும். ஏனெனில் நாம் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றோம். 1கொரி 12:13

6. ஒருவன் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குப் புறம்பே இரட்சிப்படைய முடியுமா? ''ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது. (யோவான் 3:5)

7. கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்படியாமல் இரட்சிப்படைய முடியுமா? ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவன் இரட்சிப்படைய முடியுமானால் இதுவும் முடியும். ஏனெனில் ஞானஸ்நானம் கிறிஸ்துவின் கட்டளையாயிற்றே (அப் 10:48)



(25-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049.
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர்
2. முழு முகவரி
3. பின்கோடு
4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Pres
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.